**FRIDAY SERMON - வெள்ளிக்கிழமை சொற்பொழிவு**

**Hazrat Khalifathullah Munir Ahmed Azim (A)**

**6 January 2017 [6 Rabi'ul Aakhir 1438 Hijra]**

# Voices from the unseen - மறைவானவனிடம் நின்றுள்ள வசனங்கள்

சலாம் கூறியப்பின் ஹஸ்ரத் கலீ∴பதுல்லாஹ் தஷஹுதும், தவத்தும் சூறா அல்∴பாத்திஹாவும் ஓதியப்பின் **மறைவானவனிடம் நின்றுள்ள வசனங்கள்** என்ற விஷயத்தைக்குறித்து தனது வெள்ளிக்கிழமை சொற்பொழிவை ஆரம்பித்தார்.

இப்போது அல்லாஹ்வின் அருளால் இரு சங்கங்கள் இருக்கின்றது. ஒன்று நமது சங்கம். அதாவது இந்த சங்கம் உண்மையான சங்கமென்று முழு நம்பிக்கையோடு எண்ணுகின்றோம். அதுபோல் எதிர் குழுவினர், அவர்களின் வரம்பு மீறுதலின் மூலம் எல்லாவித கண்ணியமற்ற செயல்களும், பொய்க்குற்றச்சாட்டுகளும் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது என்ற நிலையில் செயல்படுகின்றனர். சாத்தான் அவர்களின் உள்ளங்களில் விதைத்துவிட்டான். அதாவது தங்களை பொறுத்தவரை அனைத்து வகையான பழித்துக்கூறலும், தீயக்குற்றச்சாட்டுகளும் அனுமதிக்கப்பட்டதாகும். நீதிக்கு அங்கு எவ்வித இடமுமில்லை. அதொரு நற்செயலாக இருந்தால் கூட!

ஆகையால் அவர்களுடனான அனைத்து போட்டிகளையும், முயற்சிகளையும் நாம் கைவிட வேண்டும். நமது பார்வையை அல்லாஹ்வின் பக்கம் திருப்பவும். நம்மைப் பொறுத்தவரை அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வதே உன்னதமான விஷயம். பாவ மன்னிப்பிற்காக அவனிடம் யாசியுங்கள்.

எதிர் சங்கத்தின் குறை கூறுதலுக்கும் கொச்சையான பேச்சிற்கும் செவிசாய்க்காமல் (பிரார்த்தனையில் மூழ்குங்கள்) நம்முடைய ஜமாத் புரிந்துக் கொள்ள வேண்டிய விஷயம், நான் உறுதியான நிலையில் கூறும் அறிவுரைகளை கீழ்ப்படிந்து செயல்படுவது என்பதாகும். எப்பொழுதாவது ஒரு சிந்தனை என்னில் வருமானால் அது ஒரு வேளை இவ்வுலகோடு தொடர்புடையதாகும். (திருமணம் / தாம்பத்யம்) அது நிறைவேற்றப்படும். சில விஷயம் உடல் ரீதியான அழகை குறித்தாகலாம். சிலவேளை குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டாகலாம். அல்லது பொருட்கள் சம்பந்தமாக இருக்கலாம். அதுவுமில்லையென்றால் அதிகாரத்தை குறிப்பிட்டாகலாம். எதுவானாலும் அல்லாஹ் (த) இவ்விஷயங்களுக்கு முன்தூக்கம் வழங்குவதில்லை. அவன் உறுதியாக உத்தரவிடுகின்றான். **உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர்.** (49 : 14)

அதாவது அல்லாஹ்வின் பார்வையில் அவன் மட்டுமே மிக்க கண்ணியமானவன். காரணம் அவன் அமைதியுடையவனாவான். உண்மையுள்ளவனாவான். அப்பொழுது அல்லாஹ் நல்லவர்களின் சங்கத்தை பாதுகாப்பான். அவர்களின் பாதையில் எண்ணற்ற சோதனைகள் வந்தால் கூட! மற்று சங்கத்தை அவன் நாசமடையச்செய்வான். இதொரு ஆழமான விஷயமாகும். இவ்விருவருக்கும் ஒன்றிணைந்து ஓரிடத்தில் நிற்க இயலுவதில்லை. குறிப்பாக கண்ணியம் என்ற இடத்தில்! உண்மையானவனுக்கு, பொய்யனும், தீயவனுமானவனின் அதே இடத்தில் சேர்ந்து இருக்க இயலுவதில்லை. தீயவனை அளிக்க வேண்டியது அவசியமாகும். காரணம் நல்லவன் யார் என்ற விஷயத்தை நன்கறிபவன் அல்லாஹ் மட்டுமே; ஆகையால் இது ஒரு அசாதாரணமான சூழ்நிலையாகும். உண்மையன் அதிர்ஷ்டசாலியாவான். பொய்யன் துரதிர்ஷ்டசாலியுமாவான்!

அவர்களில் படித்தவர்களும், வெளிப்பாடு பெறுகின்றவர்களும் உண்டென்று சிலர் சிந்திப்பதாகயிருந்தால், அது அவர்களின் நடிப்பாலான ஒரு பொய்க்கதை மட்டுமாகும். இதில் நின்று அவர்களுக்கு எவ்வித பயனும் கிடைப்பதில்லை. மனித நிலைநிற்பின்

லட்சியத்தை அடைவதற்கு அது பயனளிப்பதில்லை. நினைவுக் கொள்ளுங்கள்! ஒரு விஷயத்தில் அல்லாஹ் திருப்தி அடையும்வரை, அவனுடைய அறிவோ, வெளிப்பாடோ அவனுக்கு பலனளிப்பதில்லை. சிறுநீர் களிப்பிடத்தின் அருகாமையில் நிற்பவனுக்கு, அவற்றின் கெட்ட வாசனை முதலில் அனுபவிக்க வேண்டி வருகிறது! அவனைச் சுற்றி நறுமணம் பூசியிருந்தாலும் கூட! அவற்றினால் அவனுக்கு என்ன பலன்தான் கிடைப்பது? அல்லாஹவின் அருகாமையை பெறாவிட்டால் அவனால் ஒன்றும் சாதிக்கமுடிவதில்லை. அல்லாஹ்வின் அருகாமையில் நிற்பதற்றான ஒரேவழி தக்குவா மட்டும்ந்தான். (அதாவது நேர்மை, சுயவிருப்பமின்மை, அல்லாஹ்விடமுள்ள பயபக்தி) உண்மையான ஓசையைக் கேட்பதற்கு, ஒருவன் உண்மையானவனாக மாறவேண்டும். நான் பெரும்பாலானவரை பார்த்திருக்கிறேன், அவர்கள் கேட்கின்ற ஒவ்வொரு ஒலியும், வெளிப்பாடு என்று கூறுகின்றனர். அது பொருளற்ற கனவுகளாக இருந்தால்கூட! அவர்கள் கேட்கின்ற ஒலியை நிச்சயமாகவும் கேட்கின்றோம். ஆனால் ஒவ்வொரு ஒலியும் அல்லாஹ்வின் குரல் என்று நம்மால் கூற இயலாது! அல்லாஹ்வின் தூய அறிவிப்பில் தூயப்பொலிவும், அருளும் அதில் இல்லாதிருக்கும் காலம்வரை அது அல்லாஹ்வினுடைய அசரீரி என்று உல்லசிக்க முடிவதில்லை. ஆகையால் இவ்வகை வெளிப்பாடுகள் கிடைக்கின்றது என்று வாதமிடுபவர்கள், அவர்கள் அத்தகைய வெளிப்பாடுகளை (வஹியை) பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். புரிந்துக்கொள்ள வேண்டும்.

சில ஓசைகள் பூரணமாகவும் பிசாசுனுடையதாகும்! அக்காரணத்தினால் தான் சில அசரீரிகளால் அறிவுடையவர்களை ஏமாற்ற முடியாதது. உள்ளத்திலுள்ள கழிவுகளையும், அழுக்குகளையும் நீக்கம் செய்யாதவரை, முழுமையான தூய இறைபக்தி (தக்குவ) பெற சாதிப்பதில்லை. அந்த உயரிய நிலையை எட்டுவதற்கு அவனுக்கு முடிவதில்லை. அந்த உன்னத நிலையை எட்டும்போது இவ்வுலகம் ஒரு அழுகிய புழுவை விட கீழ்மட்டத்தில் இருப்பதை காண்பான். அப்பொழுது அவனுடைய லட்ச்சியம் அல்லாஹ் மட்டுமாக இருக்கும். அவனுடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் லட்சியத்தை அடைவதற்காக இருக்கும். அவ்விடத்தை அடைந்து முன்னோக்கி செல்லும் போது, எவ்விடத்தை அவன் அடைந்தானோ, அங்கு நின்று அவனுடைய அல்லாஹ்வின்

குரலை அவன் கேட்க்கின்றான். அப்பொழுது அவ்வொலி அல்லாஹ்வின் உண்மையான ஒலியாக இருக்கும். காரணம் இன்னேரம் அவன் எல்லா அசுத்தத்தில் நின்றும் மீட்சிப் பெற்றிருப்பான்.

சுருக்கத்தில், இது வெறும் ஓசையால் நிறுவக்கூடிய விஷயமல்ல, சில புராதன ஏடுகள் வாசிப்பதன் மூலம் கிடைப்பதல்ல, மாறாக உண்மையும் சத்தியவுமான வழியின்பால் சீர்படுத்த வேண்டிய ஒரு விஷயமாகும். இறை உதவிப்பாதை என்றாகும் இது அறியப்படுகிறது. அதற்கு மட்டுமே இதை தீர்மானிக்க முடிகின்றது. இது இறைத்தீர்மானம் நடப்பில் வருத்துவதாகும். ஒரு நபர் அல்லாஹ்வின் முன்னில் ஒரு பதவியில் நிற்கிறார்; அவர் எல்லாவித தீயவற்றில் நின்றும் விடுதலைப் பெற்றிருக்கிறார். ஹஸ்ரத் மூஸா, ஹஸ்ரத் ஈசா, ஹஸ்ரத் நூஹ், ஹஸ்ரத் இப்ராஹீம் அதுப்போல் மற்று தூதர்களும் (அ) அத்தோடு ஹஸ்ரத் முஹம்மது (ஸ) வும் கேட்ட, அந்த தூய அசரீரிகள் அவனும் கேட்க்கின்றான். நான் கூறுவது உண்மையாகும். இந்த உண்மைக்கு எந்தமனிதனின் உதவியும் தேவையில்லை. இந்த ஒலிகளை, அடையாளங்களை நடைமுறைப்படுத்த எந்த மனிதனுடையவும் உதவி தேவையில்லை. மாறாக அல்லாஹ் தானாகவே அவ்வகை நபர்களின் பொலிவை (மிக நல்ல அழகை) காட்சிப்படுத்துகின்றான். இவையாவும் மிக மறைவான விஷயமாக இருந்தாலும், அறிவுனுடைய ரகசியங்களில் இதுவும் உட்படுத்தப்பட்டிருக்கிறது. நறுமணமும், நாற்றமும் அவற்றன் சரியான பாதையின் மூலம் பிரித்தறிய முடிகின்றது. ஒரு நல்ல மரத்தை பல வகையிலும் புரிந்துக்கொள்ள முடிகின்றது. வேண்டுமென்றால் அவற்றின் இலைகளின்மூலம் அதை புரிந்துக் கொள்ளலாம். அறிவுடைய ஒரு மனிதன் பொருட்களின் நிஜத்தை பல வகையிலும் புரிந்துக் கொள்ளுகின்றான். அயோக்கியத்தனம் ஆயிரம் பைகளில் மூடப்பட்டதாக இருக்கும். அது போலவே தக்வாவும் (இறைபக்தி) ஆயிரம் பைகளில் மறைந்திருக்கும். ஆனால் அவற்றின் அடையாளங்களும், சந்தர்ப்பங்களும் என்ன என்பதை குறிப்பிட்டிருக்கும்.

ஒரு அயோக்கியன் தனது அயோக்கிய தனத்தை மறைத்து வைக்க விரும்புகின்றான். அது போலவே ஒரு நற்குணமுடையவன் தனது நற்குணத்தை

மறைத்து வைக்க விரும்புகிறான். தக்வாவின் உண்மையைக் குறித்துக் கூறினால், வானவர்களுக்குக்கூட அதைப்பற்றி தெரிவதில்லை. அவ்வாறிருக்க மற்றொருவருக்கு எவ்வாறு புரிய முடியும்.

தூய தூதர் முஹம்மது (ஸ) வுக்கு அல்லாஹ் (த) வுடனான நெருக்கத்தின் தீவிரமும், நிலையும், அல்லாஹ் அல்லாமல் மற்றெவராலும் புரிந்துக்கொள்ள முடியவில்லை என்பது ஓர் உண்மையாய் நிலை நிற்கிறது. ஹஸ்ரத் அபூபக்கர் (ர)விற்கோ, ஹஸ்ரத் அலி (ர) விற்கோ, அல்லது மற்றெவருக்கேனுமோ அது தெரிவதில்லை. அன்னாருக்கு பௌதீக உலகத்தோடு ஏற்பட்ட முழுமையான விருப்பமின்மை, அல்லாஹ்விடம் ஏற்பட்ட முழுமையான அடைக்கலம், இறந்த உயிரினத்தைவிட மிகசாதரணமான படைப்பு என்ற அன்னாரின் எண்ணம், இவையனைத்தும் மற்றெருவராலும் பார்க்க முடியாத உண்மைகளாகும். ஆனால் இறைவனின் திடப்படுத்தலின் மூலம் விஷயங்களை பார்க்கும்பொழுது, நிச்சயமாகவும் அவர்களுக்கு ஓர் அனுமானத்தில் சென்று சேரமுடியும். அதாவது அன்னார் அல்லாஹ் (த) வுடன் உண்மையான, ஆற்றல் நிறைந்த ஒரு உறவை வளர்த்து எடுத்திருந்தார். என்றும்! அதுப்போல் எல்லாம் வல்ல இறைவன் அன்னாருடன் எவ்வித ஏற்றத்தாழ்வும் கொண்டிருக்கவில்லை! என்றும்!

சொற்பொழிவை செவிகொண்ட உங்களனைவருக்கும் அல்லாஹ் (த) அருள் செய்வானாக! நேரான வழியில் உங்களை அவன் வழி நடத்துவானாக!

**இன்ஷா அல்லாஹ்! ஆமீன்**

**Issued by:**
R Jamaludin Raother
Amir Jamaat Ul - Sahih Al Islam
South Zone, Kerala A693/2010

**Translated by:**
Mohamed Sudheer. I
Ph : 9659884310
E-mail: abdulsuthi9@gmail.com